**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6**
**மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு - மார்ச் – 2018**
**வரலாறு - விடைக்குறிப்புகள்**

குறிப்பு: 1. கருப்பு அல்லது நீல நிற மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

2. பிரிவு – I ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

3. ஏற்புடைய விடையின் குறியீட்டையோ அல்லது அதன் விடையையோ எழுதி இருப்பின் ஒரு மதிப்பெண் வழங்கப்படலாம். (இது இவ்வாண்டிற்கு மட்டுமே)

4. விடை குறியீடு அல்லது விடை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று தவறாக இருப்பின், அதற்கு 0 மதிப்பெண் மட்டுமே வழங்கவேண்டும்.

**மொத்த மதிப்பெண்கள்:90**

| I. | பிரிவு – I சரியான விடை எழுதியிருக்க வேண்டும் | | | | 20 x 1 = 20 |
|---|---|---|---|---|---|
| 1 | அ) | தோ ஆப் | 11 | ஈ) | ஸ்ரீ விஜயம் |
| 2 | ஆ) | ரிக் | 12 | அ) | 1192 |
| 3 | அ) | காஷ்மீர் | 13 | ஈ) | இல்துத்மிஷ் |
| 4 | ஆ) | ராஜகிருகம் | 14 | ஈ) | முக்திகள் |
| 5 | இ) | மெகஸ்தனீஸ் | 15 | ஆ) | கபீர் |
| 6 | ஈ) | புஷ்யமித்ர சுங்கன் | 16 | அ) | விருபாக்ஷர் |
| 7 | ஈ) | ஹரிசேனர் | 17 | இ) | துருக்கி |
| 8 | அ) | பாணர் | 18 | இ) | பதேபூர்சிக்ரி |
| 9 | ஈ) | சிம்ம விஷ்ணு | 19 | அ) | ஷிவ்னேர் |
| 10 | ஈ) | இரண்டாம் புலிகேசி | 20 | ஈ) | அல்மெய்டா |

| பிரிவு–II வினா எண் 30 -க்கு கட்டாயமாக விடையளித்திருக்க வேண்டும் எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளித்திருக்க வேண்டும் | | 7×2=14 |
|---|---|---|
| 21 | **இமாலய மலைகள்**<br>1. இந்தியாவின் வடக்குப் பகுதியில் இமாலய மலைகள் அமைந்துள்ளன.<br>2. இமாலய மலையின் உயரமான சிகரம் எவரெஸ்ட் உயரம் 8848 மீ.<br>3. மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர் காற்றை தடுக்கிறது.<br>4. அந்நிய படையெடுப்பிலிருந்து இந்தியாவை பாதுகாக்கிறது. | 2 |
| 22 | **புத்தரின் நான்கு உண்மைகள்**<br>1. உலகம் துன்பங்கள் நிறைந்தது.<br>2. துன்பங்களுக்கு காரணம் ஆசை.<br>3. ஆசைகளை துறந்தால் துன்பங்களை துடைக்கலாம்.<br>4. இதற்கு எண் வழிகளைப் பின்பற்ற வேண்டும். | 2 |
| 23 | **பதினாறு மகாஜனபதங்கள்**<br>1. வட இந்தியாவில் "பதினாறு மகாஜனபதங்கள்" என்ற பதினாறு பெரும் அரசுகள் இருந்தன.<br>2. இறுதியில் நான்கு அரசுகள் மட்டுமே எஞ்சி இருந்தன.<br>3. அவை வத்சம், அவந்தி, கோசலம், மகதம்.<br>4. புத்த இலக்கியமான "அங்குத்தார நிகயம்" இவ்வரசுகளைப் பற்றி குறிப்பிடுகிறது. | 2 |



388-59_(2,500 Cps)-1

| | | |
|---|---|---|
| 24 | **கௌதமி புத்ர சதகர்ணி**<br>1. சாதவாகன மரபின் சிறந்த அரசர் கௌதமி புத்ர சதகர்ணி<br>2. 24 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்<br>3. நாசிக் கல்வெட்டில் அவரது சாதனைகள் குறிக்கப்பட்டுள்ளது.<br>4. தக்காணம் முழுவதும் கைப்பற்றி பேரரசை விரிவுப்படுத்தினார்.<br>5. பிராமண சமயத்தை ஆதரித்தார். | 2 |
| 25 | **பாஹியான்**<br>1. இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சிக்காலத்தில் பாஹியான் இந்தியாவிற்கு வந்தார்.<br>2. இந்தியாவில் அவர் 9 ஆண்டுகளில்,குப்த பேரரசில் மட்டும் 6 ஆண்டுகள் இருந்தார்.<br>3. பெஷாவர்,காசி,புத்தகயா, இடங்களுக்கு சென்றார்.<br>4. புத்தர்பிறந்த வாழ்ந்த இடங்களை தரிசித்து, புத்த சுவடிகளை சேகரிப்பதை நோக்கமாக கொண்டார்.<br>5. கங்கைச் சமவெளியை 'பிராமணர்களின் பூமி' என்று குறிப்பிட்டுள்ளார். | 2 |
| 26 | **காஞ்சிக் கடிகை**<br>1. காஞ்சிக் கடிகை மிகச் சிறப்பு வாய்ந்த கல்விக் கூடமாகும்.<br>2. இந்தியாவின் பிற பகுதிகளில் இருந்தும், அயல்நாடுகளில் இருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயின்றனர்.<br>3. மயூர சர்மன், திங்கநாதர் போன்றோர் கல்வி பயில காஞ்சி வந்தார்கள். | 2 |
| 27 | **அமோக வர்ஷர்**<br>1. இராஷ்ட்டிர கூட மரபைச் சார்ந்தவர்<br>2. கவிராஜா மார்க்கம் என்ற கன்னட நூலை எழுதினார்<br>3. இராஷ்ட்டிர கூடர்களின் தலைநகரான "மால்கெட்" அல்லது 'மான்ய கேதம்' என்ற நகரை நிர்மாணித்தார்.<br>4. சமண சமயத்தைப் பின்பற்றினார்.<br>5. இவர் 64 ஆண்டுகள் ஆட்சி செய்தார். | 2 |
| 28 | **அங்காடி சீர்திருத்தங்கள்:**<br>1. டெல்லியில் நான்கு தனித்தனி அங்காடிகளை நிறுவினார்<br>2. ஒவ்வொரு அங்காடியும் "சஹானா–இ–மண்டி" என்ற அதிகாரி கட்டுப்பாட்டில் செயல்பட்டது.<br>3. அனைத்து வகை பொருட்களுக்கும் "விலை நிர்ணயம்" செய்து வெளியிடப்பட்டன.<br>4. அடிமை சிறுவர்களை அங்காடிக்கு அனுப்பி பொருட்களை வாங்கி வர செய்வது வழக்கம்.<br>5. எடை குறைவாக இருந்தால் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது. | 2 |
| 29 | **குதுப்மினார்**<br>1. பதின்மூன்றாம் நூற்றாண்டின் மிகவும் பிரம்மாண்டமான கட்டிடம் குதுப்மினார்.<br>2. குத்புதீன் ஐபெக்கால் தொடங்கப்பட்டு இல்துத்மிஷால் கட்டி முடிக்கப்பட்டது.<br>3. எழுபத்தியொரு மீட்டர் உயரம் கொண்டது.<br>4. இந்த கோபுரம் சூஃபி துறவி "குத்புதீன் பக்தியார் காஜி" என்பவரது நினைவாக எழுப்பப்பட்டது.<br>5. அலாவுதீன் கில்ஜி குதுப்மினாருக்கு 'அலைதர்வாசா' என்ற நுழைவாயிலை அமைத்தார். | 2 |
| 30 | **ராபர்ட் கிளைவ்**<br>1. பிரிட்டிஷ் தளபதியான ராபர்ட் கிளைவ் இரண்டாம் கர்நாடகப் போரில் ஆற்காட்டை கைப்பற்றினார்.<br>2. 1757 ஆம் ஆண்டு பிளாசிப் போரிலும் வெற்றி வீரராக எழுச்சிப் பெற்றார்.<br>3. 1765 –ல் வங்காளத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். | 2 |

| பிரிவு–III (வினா எண் 40 க்கு கட்டாயமாக விடையளித்திருக்க வேண்டும் ) எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளித்திருக்க வேண்டும் | | 7×3=21 |
|---|---|---|
| 31 | பழைய கற்காலம்<br>1. பழைய கற்காலம் என்பது கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.<br>2. இக்காலத்தில் மக்கள் விலங்குகளை வேட்டையாடியும், கிழங்குகளைச் சேகரித்தும் உணவைத் தேடிக் கொண்டனர்.<br>3. 'இவர்கள் உணவைச் சேகரிப்போர்' எனப்படுகின்றனர்.<br>4. கையளவு கற்கருவி, உடைந்த கூழாங்கற்களே இவர்களது ஆயுதங்கள் | 3 |
| 32 | பிந்தைய வேதகால பொருளாதார நிலை<br>1. இக்காலத்தில் இரும்பின் உபயோகம் அதிகமாய்க் காணப்பட்டது.<br>2. வேளாண்மை முக்கியத் தொழிலாக விளங்கியது.<br>3. உலோக வேலைப்பாடுகள், தோல் பொருட்கள், தச்சுத்தொழில், மட்பாண்டங்கள் போன்றவை பெரும் வளர்ச்சியடைந்தன.<br>4. பாபிலோனியா போன்ற பல நாடுகளுடன் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது.<br>5. கணங்கள் எனப்பட்ட வாணிகக் குழுக்களை அமைத்துக் கொண்டனர். | 3 |
| 33 | சமண புத்த சமயங்கள் எழுச்சி பெற காரணங்கள்.<br>1. கி.மு ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் நிலவிய சமயம் சார்ந்த அமைதியின்மையே,<br>2. பிந்தைய வேத காலத்தில் புகுத்தப்பட்ட சிக்கலான சடங்கு முறைகளும், வேள்விகளும் சாதராண மக்களுக்கு ஏற்புடையதாக இல்லை.<br>3. மூட நம்பிக்கைகளும்,மந்திரங்களும் மக்களிடையே பெரும் குழப்பத்தை உருவாக்கின.<br>4. இந்தியாவிலிருந்த கடுமையான ஜாதிமுறை சமுதாயத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது.<br>5. புரோகித வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஷத்திரியர்கள் வெறுத்தனர். | 3 |
| 34 | சங்ககால இலக்கியங்கள்<br>1. தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை.<br>2. காலத்தால் தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர்.<br>3. எட்டுத்தொகை என்ற நூல் எட்டு நூல்களின் தொகுப்பாகும்.<br>4. பத்துப்பாட்டில் பத்து நூல்கள் உள்ளன.<br>5. அகம், புறம் என்ற இரு திணைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. | 3 |
| 35 | நாளந்தா பல்கலைக்கழகம்<br>1. 'நாளந்தா' என்ற சொல்லுக்கு 'அறிவை அளிப்பவர்' என்று பொருள்.<br>2. இது குமார குப்தரால் நிறுவப்பட்டது.<br>3. பல்கலைக் கழக பேராசிரியர்கள் பண்டிதர்கள் எனப்பட்டனர்.<br>4. நுழைவுத் தேர்வு அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். | 3 |

| | | |
|---|---|---|
| 36 | **பல்லவர்கால நுண்கலைகள் .**<br>1. இசை, நடனம், ஓவியம் போன்ற நுண்கலைகளை பல்லவர்கள் ஆதாரித்தனர்.<br>2. மாமண்டூர் மற்றும் குடுமியான் மலை இசைக்கல்வெட்டுகள் இசைப்பண் மற்றும் இசை கருவிகளையும் குறிப்பிடுகிறது.<br>3. நடனமும், நாடகமும் இக்காலத்தில் வளர்ச்சிப் பெற்றது.<br>4. சித்தன்னவாசல் ஓவியங்கள் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை.<br>5. முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் "தட்சிண சித்திரம்" என்ற ஓவியக்கலை விளக்கங்கள் தொகுக்கப்பட்டது. | 3 |
| 37 | **சோழர் காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி.**<br>1. தமிழ் இலக்கிய வளர்ச்சி அதன் உச்சத்திற்கே சென்றது.<br>2. "கம்பர் எழுதிய கம்பராமாயணம்" "சேக்கிழார் எழுதிய பெரியபுராணம்" சோழர் காலத்தில் எழுதப்பட்டவை.<br>3. முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்க படையெடுப்பை விவரிப்பது கலிங்கத்துப்பரணி.<br>4. ஒட்டக் கூத்தரின் "மூவருலா" நூல் மூன்று சோழ மன்னர்களைப் பற்றியதாகும். | 3 |
| 38 | **இந்தியா – இலங்கை இடையே நிலவிய பண்பாட்டுத் தொடர்புகள்**<br>1. புத்த சமயதூதுக் குழுவினர் பண்பாட்டு கூறுகளையும் இலங்கையில் பரப்பினர்.<br>2. கல்லில் சிற்பங்கள் வடிக்கும் முறை இந்தியாவிலிருந்து இலங்கை சென்றது.<br>3. புத்தகோஷர் இலங்கை சென்று ஹீனயான புத்தப் பிரிவை நிலைநிறுத்தினார்.<br>4. சிகிரியா ஓவியங்களில் அஜந்தா ஓவிய தாக்கத்தை உணரலாம். | 3 |
| 39 | **முகலாயர் கால கிராமப்புற மக்களின் பொருளாதார நிலை**<br>1. செல்வச்சீமான்கள் பட்டு மற்றும் பருத்தி ஆடைகளை அணிந்தனர்.<br>2. ஏழை மக்கள் உடுக்க உடையின்றி, குறைந்தபட்ச உடையிலேயே காலம் கழித்தனர்.<br>3. தக்காணத்தில் வாழ்ந்த மக்கள் காலணி இன்றி காணப்பட்டனர்.<br>4. அரிசி, தினை, பருப்பு வகைகள் போன்றவை சாதாரண மக்களின் முக்கிய உணவாகும்.<br>5. கடற்கரைப்பகுதிகளில் மீன் உணவு தாராளமாகக் கிடைத்தது.<br>6. பால் மற்றும் பால் பொருட்கள் தாராளமாகக் கிடைத்தது. | 3 |
| 40 | **மராட்டியரின் எழுச்சிக்கான காரணங்கள்**<br>1. மராட்டிய தேசத்தின் புவியியல் கூறுகள் அவர்களுக்கு சிறப்பான குணத்தை அளித்தன.<br>2. கொரில்லா போர்முறையைப் பின்பற்றினர்.<br>3. பக்தி இயக்கம் சமய உணர்வை ஊட்டியது.<br>4. சிவாஜியால் அரசியல் ஒற்றுமை ஏற்பட்டது.<br>5. மோரேக்கள், நிம்பால்கர்கள் போன்ற செல்வாக்கு மிகுந்த மராட்டிய குடும்பங்கள் இருந்தன. | 3 |

| பகுதி IV<br>அனைத்து வினாக்களுக்கும் விடையளித்திருக்க வேண்டும் 7 × 5=35 | | |
|---|---|---|
| 41 | <u>இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு</u><br>1. பண்டைய காலத்திலிருந்தே இந்தியாவில் பல சமயங்கள் இருந்துள்ளன.<br>2. இந்தியாவில் இந்து, புத்த, சமண சமயங்கள் புகழ் பெற்றிருந்தன.<br>3. இந்திய மக்கள் பல்வேறு மொழிகளை பேசினாலும், சமயங்களை பின்பற்றினாலும், சமூக பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டிருந்தாலும் நாடு முழுவதும் ஒரு சில பொதுப் பண்புள்ள வாழ்க்கை முறையை காணமுடிகிறது.<br>4. இந்திய துணைக் கண்டம் முழுவதும் ஒரே நாடு என்ற உணர்வு காணப்படுகிறது.<br>5. அயல் நாட்டவர் இத்துணை கண்டத்தை சிந்து என்று அழைத்தனர்.<br>6. மொழி பண்பாட்டு ஒருங்கிணைப்பு<br>7. பன்முகப் பண்பாட்டைப் போற்றும் சமுதாயமாக எழுச்சி பெற்று திகழ்கிறது.<br>**(அல்லது)**<br>**ஹரப்பா நாகரிகத்தின் சமூக, பொருளாதார நிலைகள்.**<br><u>சமூக நிலை</u><br>1. ஆண், பெண் இருபாலரும் கீழாடை, மேலாடைகளை அணிந்தனர்.<br>2. இருபாலரும் மணிகளாலான ஆபரணங்களை அணிந்து கொண்டனர்.<br>3. கோலிகள்,பந்துகள்,தாயம் போன்றவை விளையாட்டுக்கு பயன்பட்டன.<br>4. மீன்பிடித்தல்,வேட்டையாடுதல்,எருது சண்டை காணப்பட்டன.<br><u>பொருளாதார நிலை :</u><br>1. வேளாண்மை,கைத்தொழில்,வாணிகம் சிறந்து காணப்பட்டன.<br>2. கோதுமை ,பார்லியும் முக்கிய விளைப் பொருட்களாகும்.<br>3. வெண்கலம், செம்பாலான பாத்திரங்கள் உலோகத் தொழிலுக்கு ஆதாரம் ஆகும்.<br>மெசபடோமியா, ஆப்கானிஸ்தான், ஈரானோடு வர்த்தகம் நடைபெற்றது. | 5 |
| 42 | **புத்தசமயம் மறையக் காரணங்கள்:**<br>1. பிராமண சமயம் புத்துயிர் பெற்றதாலும், பாகவத சமயத்தின் எழுச்சியாலும் புத்தசமயத்தின் புகழ் மங்கத் தொடங்கியது.<br>2. மக்களின் மொழியான பாலிமொழி புத்தசமயத்தின் மொழியாக இருந்த நிலை கி.பி முதலாம் நூற்றாண்டுக்குப் பிறகு மாறியது.<br>3. கற்றோர் மொழியான வடமொழியை புத்தசமயம் பின்பற்றத் தொடங்கியது.<br>4. மகாயான புத்தசமயம் தோன்றிய பிறகு, சிலை வழிபாடும் பூசைகளும், மலிந்தன.<br>5. இதனால் ஒழுக்க நெறிகள் குறையத் தொடங்கின.<br>6. மேலும் கி.பி 5 மற்றும் 6ம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற ஹீணர்களின் படையெடுப்பாலும், 2ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட துருக்கிய படையெடுப்புகளின் போதும் புத்தசமய மடாலயங்கள் அழிக்கப்பட்டன.<br>**(அல்லது )**<br><u>அலெக்சாந்தரின் இந்தியப் படையெடுப்புக்கான காரணங்கள்:</u><br>1. கி.மு 334 ல் அலெக்சாந்தர் மாசிடோனியாவின் அரசராக பதவியேற்றார்.<br>2. கி.மு330 ல் அர்பேலா போரில் வென்று பாரசீகத்தை கைப்பற்றினார்.<br>3. ஹெரோடோடஸ் போன்ற எழுத்தாளர்கள் குறிப்பிட்டிருந்த இந்தியாவின் செல்வ செழிப்பு அலெக்சாந்தரை ஈர்த்தது.<br>4. புவியியல் ஆய்வு ஆர்வம்,இயற்கை ஆய்வு செய்தல் போன்ற காரணங்களாலும் அலெக்சாந்தர் இந்தியா மீது படையெடுத்தார்.<br>5. இந்தியாவுக்கு கிழக்கே கடல் இருப்பதாக அவர் நம்பினார்.<br>6. எனவே அவர் இந்தியாவை கைப்பற்றுவதன் மூலம்,உலகின் கிழக்கு எல்லையை கைப்பற்றி விடலாம் என அவர் நினைத்தார். | 5 |

| | | |
|---|---|---|
| 43 | <u>அசோகரின் சாதனைகளும்,தர்மக் கோட்பாடுகளும்:</u><br><u>1. அசோகரின் சாதனைகள்:</u><br>1. பிந்து சாரருக்கு பிறகு அசோகர் மௌரியப் பேரரசர் ஆனார்.<br>2. இவரது ஆட்சியின் முக்கிய நிகழ்வு, கி.மு 261 ல் கலிங்கப் போரில் அவர் பெற்ற வெற்றியாகும். இப்போர் பற்றிய விவரங்கள் 13-ம் பாறைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>3. கலிங்கப் போருக்குப் பிறகு, அசோகர் புத்த சமயத்தை தழுவினார்.<br>4. பாடலிபுத்திரத்தில் 3 வது புத்த மாநாட்டைக் கூட்டினார்.<br><u>2. அசோகரின் தர்ம கோட்பாடுகள்:</u><br>1. இது ஒரு வாழ்க்கை நெறி ஆகும்.<br>2. தாய் தந்தைக்கு பணிவிடை செய்தல்.<br>3. ஆசிரியர்களைப் போற்றுதல்.<br>4. விலங்குகளை பலியிடுவதை தடை செய்தல்.<br>5. போர் செய்தலை தவிர்த்தல்.<br>(அல்லது )<br>சங்க காலத்தில் நிலவிய அரசியல் ஆட்சி முறை<br>1. முடியாட்சி முறை வழக்கிலிருந்தது, அமைச்சர், அவைப்புலவர், அரசவையோர் ஆலோசனைகளை அரசர் கேட்டு நடந்தார்<br>2. வானவர், சென்னி, தென்னவர், மீனவர் என்பவை சங்க கால மன்னர்களின் விருதுப் பெயர்களாகும்.<br>3. சங்ககால அரச குலங்கள் அரசு சின்னங்களை பெற்றிருந்தனர்.<br>4. பாண்டியர் – மீன், சேரன்– வில், அம்பு, சோழன்–புலி<br>5. ஐந்து குழுக்கள்–அமைச்சர்கள், அந்தணர்கள், படைத்தலைவர்கள், தூதுவர்கள், ஒற்றர்கள்<br>6. அரசின் முக்கிய வருவாய் நிலவரி, அயல்நாட்டு வாணிகத்தின் மீது சுங்கம் வசூலிக்கப்பட்டது.<br>7. போரின்போது கைப்பற்றப்படும் கொள்ளைப் பொருட்கள் அரசுக் கருவூலத்திற்கு முக்கிய வருவாயாக திகழ்ந்தது. | 5 |
| 44 | <u>குப்தர் கால அறிவியல் வளர்ச்சி :</u><br>1. கணிதம்,வானியல்,ஜோதிடம்,மருத்துவத்தில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டது.<br>2. சிறந்த கணித மேதை, வானியல் அறிஞரான ஆரியபட்டர் ஆரிய பைட்டியம் என்ற நூலை எழுதினார்.<br>3. வராக மிகிரர் பஞ்சசித்தாந்திகா,பிருகத்சம்ஹிதை போன்ற நூல்களை படைத்தார்.<br>4. இவர் எழுதிய பிருகத்ஜாதகம் ஜோதிடக் கலைக்கு அடிப்படையாகும்.<br>5. பண்டைய மருத்துவ மும்மணிகளில் ஒருவரான வாக்பதர்,குப்தர் காலத்தில் வாழ்ந்தார்.<br>(அல்லது)<br><u>சோழர் ஆட்சியின் சமூக,பொருளாதார நிலை:</u><br><u>(1) சமூக நிலை:</u><br>1. சோழர் காலத்தில் ஜாதிமுறை பரவலாகப் பின்பற்றப் பட்டது.<br>2. பிராமணரும், ஷத்திரியரும் பல்வேறு சலுகைகளைப் பின்பற்றினார்கள்.<br>3. மகளிர் நிலையில் முன்னேற்றம் ஏதுமில்லை.<br>4. அரசக் குடும்பத்தாரிடம் சதி வழக்கம் இருந்தது.<br>5. வைணவமும், சைவமும் தழைத்தன.<br><u>(2) பொருளாதார நிலை:</u><br>1. வேளாண்மையும்,தொழிலும் சிறந்து விளங்கின.<br>2. ஏரிகள் வெட்டப்பட்டதால் வேளாண் தொழில் வளர்ச்சி பெற்றது.<br>3. காஞ்சியில் பட்டுத் தொழில் புகழ் பெற்று விளங்கியது.<br>4. தங்கம்,வெள்ளி,செம்பு நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன.<br>5. சீனா,ஜாவா,அரேபியா நாடுகளோடு வாணிப உறவுகள் செழித்தன. | 5 |

| | | | |
|---|---|---|---|
| 45 | **கஜினி முகமதுவின் படையெடுப்புகள்:**<br>1. கஜினி முகமது இந்தியா மீது 17 முறை படையெடுத்தார்.<br>2. கி.பி 1001 ல் சாஹி அரசர் ஜெயபாலரை தோற்கடித்தார்.<br>3. கி.பி 1008 ல் வைஹிந்த் போரில் அனந்த பாலரை தோற்கடித்தார்.<br>4. கி.பி 1018 ல் கஜினி முகமது மதுரா நகரை சூறையாடினார்.<br>5. கனோஜ் நகரை விட்டு அரசர் ராஜ்ய பாலரை விரட்டினார்.<br>6. கி.பி 1024 ல் சோலங்கி அரசர் பீமதேவனை தோற்கடித்து சோமநாதபுர ஆலயத்தை சூறையாடினார்.<br>(அல்லது)<br>**இல்துத்மிஷின் சாதனைகள்**<br>1. ஆரம்பக்ஷை விரட்டிவிட்டு சுல்தானாக பதவியேற்றார்.<br>2. லாகூரில் இருந்த தலைநகரை டெல்லிக்கு மாற்றினார்.<br>3. வங்காளம் பீகார் மீது படையெடுத்தார்.<br>4. இராஜபுத்திரர்களின் கிளர்ச்சியை அடக்கினார்.<br>5. காலிப்பிடம் அனுமதி பெற்று சட்டப்படி இந்திய மன்னரானார்.<br>6. பரம்பரை ஆட்சிமுறையை தொடங்கி வைத்தார்.<br>7. குதுப்மினாரை கட்டி முடித்தார்.<br>8. சூஃபி துறவிகளை ஆதரித்தார்.<br>9. 'தாங்கா' என்ற அராபிய நாணய முறையை அறிமுகப்படுத்தினார்.<br>நாற்பதின்மர் குழுவை ஏற்படுத்தினார். | 5 |
| 46 | **டெல்லி சுல்தானிய ஆட்சியின் கலை,கட்டிடக்கலை :**<br>1. டெல்லி சுல்தானிய கலை,கட்டிடக் கலை இந்தியப் பாணியிலிருந்து மாறுபட்டது.<br>2. வளைவுகள், குவிமாடங்கள், மினாரட்டுகளை அறிமுகப்படுத்தினார்கள்.<br>3. சிகப்பு, மஞ்சள், பளிங்கு கற்களையும், மணற் பாறைகளையும் பயன்படுத்தினார்கள்.<br>4. குதுப்பினார் ஐபக்கால் தொடங்கப்பட்டு, இல்துத்மிஷால் கட்டி முடிக்கப்பட்டது.<br>5. அலாவுதீன் கில்ஜி குதுப்மினாருக்கு அலைதர்வாசா என்ற நுழைவாயிலை கட்டினார்.<br>6. கியாசுதீன் துக்ளக் துக்ளகாபாத் அரண்மனையைக் கட்டினார்.<br>7. பிரோஸ் துக்ளக் டெல்லி கோட்லாக் கோட்டையைக் கட்டினார்.<br>**(அல்லது)**<br>**இந்திய சமூகத்தில் பக்தி இயக்கம் ஏற்படுத்திய தாக்கம்**<br>1. இந்தியாவில் பக்தி இயக்கத்தின் சிறப்பு குறிப்பிடத்தக்கது.<br>2. பல்வேறு போதனையாளர்களும் தத்தம் பிராந்திய மொழியிலேயே எழுதியும் பேசியும் வந்தனர்.<br>3. இந்தி, மராத்தி, வங்காளம், கன்னடம் போன்ற மொழிகள் வளர்ச்சியடைவதற்கு பக்தி இயக்கம் ஊக்கமளித்தது.<br>4. சாதிமுறையை பக்தி இயக்கத்தலைவர்கள் ஒருமித்த குரலில் சாடியதால், தாழ்த்தப்பட்ட மக்கள் நிலை உயர்வதற்கு பக்தி இயக்கம் வழி வகுத்தது.<br>5. பக்தி இயக்கம் பெண்களுக்கு சம முக்கியதுவம் அளித்தமையால், சமுதாயத்தில் அவர்களது நிலை உயரவும் வழிவகுத்தது.<br>6. சிக்கலற்ற எளிய வழியை பக்தி இயக்கம் மக்களுக்கு எடுத்துக்கூறியது.<br>7. கடவுள்மீது தீவிர பக்தி செலுத்துமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.<br>கொடை மிகுந்த வாழ்க்கை, மனித குலத்திற்கு சேவை போன்ற புதிய கருத்துக்கள் தோன்றி வளர்ந்தன. | 5 |

| | | |
|---|---|---|
| 47 | 1. ஔரங்கசீப் ஆட்சிப்பகுதி – 2 ½ மதிப்பெண்கள்<br>2. இடங்கள் (5) – 2 ½ மதிப்பெண்கள்<br>மொத்தம் – 5 மதிப்பெண்கள்<br>(அல்லது) | |
| | காலக்கோடு – 1300 விருந்து 1600 வரை விஜயநகர் பாமினி அரசுகளின் ஏதேனும் ஐந்து நிகழ்வுகள்<br>1. 1336 விஜயநகர அரசு தோற்றம்.<br>2. 1347 பாமினி அரசு தோற்றம்.<br>3. 1486 சாளுவ மரபு தோற்றம்.<br>4. 1509 கிருஷ்ண தேவராயர் அரியணை ஏறுதல்.<br>5. 1520 கிருஷ்ண தேவராயர் ரெய்ச்சூர் நகரை கைப்பற்றுதல்.<br>6. 1526 பாமினி அரசு ஐந்தாகப் பிரிந்தது.<br>7. 1530 கிருஷ்ண தேவராயரின் ஆட்சிமுடிவு<br>8. 1565 தலைக்கோட்டைப் போர்.<br>(ஏதேனும் ஐந்து) | 5 |